

கடலூர் மேற்கு மாவட்டம், அண்ணாகிராமம் ஒன்றியம், கீழ்கவரப்பட்டு ஊராட்சி வடக்குப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த தி.மு.க. கிளை கழக பிரதிநிதி சாம்பசிவம் அவர்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டு வீட்டில் அவதிப்பட்டு வந்த நிலையில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் நேரில் சந்தித்து உடல் நலம் விசாரித்து, மருத்துவ நிதி உதவி வழங்கினார். மேலும் அறுவை சிகிச்சைக்கு தேவையான முழு மருத்துவ செலவையும் ஏற்பதாக அமைச்சர் கூறினார். அண்ணாகிராமம் ஒன்றியக் கழகச் செயலாளர் வி.கே.வெங்கட்ராமன்,கழக பொதுக்குழு உறுப்பினர் என்.பலராமன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### தருமபுரி சுப்பிரமணிய சிவா - கள்ளக்குறிச்சி 2 ஆகிய

# இரு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு முதல் பரிசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் விருதுகளை காண்பித்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வாழ்த்துப் பெற்றார்!

**சென்னை, ஆக. 16-**

**தேசிய அளவிலான கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கூட்டமைப்பால் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் கள்ளக்குறிச்சி 2 கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகிய இரு ஆலைகளுக்கு வழங்கப்பட்ட முதல் பரிசிற்கான விருதுகள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.8.2024) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சந்தித்து, புதுடில்லியில் உள்ள தேசிய அளவிலான கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கூட்ட மைப்பால் 2022-23ஆம் பருவத்தில் தேசிய அளவில் ஒட்டுமொத்த செயல்திறனுக்கான சிறந்த கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கான முதல் பரிசிற்கான விருதினை தர்மபுரி மாவட்டத்திலுள்ள சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும், தேசிய அளவில் சிறந்த நிதி மேலாண்மைக்குரிய முதல் பரிசிற்கான விருதினை கள்ளக்குறிச்சி 2 கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும் வழங்கப்பட்டதையொட்டி, அவ்விருதுகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றது முதல், தமிழ்நாட்டில் செயல்படும் சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகளை மேம்படுத்திடவும், கரும்பு விவசாயப் பெருமக்களின் நலன் காக்கவும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மூலம் பல்வேறு வளர்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 22 தனியார் துறை சர்க்கரை ஆலைகள், என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன. 2023-24ஆம் அரவைப் பருவத்தில் 12 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 16 தனியார் என மொத்தம் 30 சர்க்கரை ஆலைகள் அரவையை மேற்கொண்டுள்ளன.

கரும்பு விவசாயிகள் மீது அக்கறை கொண்ட இவ்வரசு கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி ஊக்கத்தொகை, சிறப்பு ஊக்கத்தொகை மற்றும் கரும்பு விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கரும்பு விலையை வழங்கிட சர்க்கரை ஆலைகளுக்கு வழிவகைக் கடனாக சுமார் 1224.36 கோடி ரூபாய் நிதியுதவி செய்துள்ளது. 2023-24ஆம் அரவைப் பருவத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 215/சிறப்பு ஊக்கத் தொகை அறிவிக்கப்பட்டு ரூ.250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் மூலம் புதிய கரும்பு இரகங்கள், பருசீவல் நாற்றுகள், தோகை தூளாக்குதல், கரும்பு அறுவடை இயந்திரங்கள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கரும்பு அபிவிருத்தப் பணிகளுக்காகவும், ஆலைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் சுமார் ரூ.13.27 கோடி நிதியுதவி செய்துள்ளது. நீண்டகாலமாக கிடப்பில் போடப்பட்டிருந்த தர்மபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் இணைமின் உற்பத்தித் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப் பட்டுள்ளது.

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு, நீண்டகாலமாக நிலுவையில் இருந்து வந்த நிலையில் இவ்வரசு 1.10.2022 முதல் சுமார் 35 விழுக்காடு ஊதிய உயர்வு வழங்கி தொழிலாளர்களின் நலன் காக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக நலிவடைந்த நிலையிலிருந்த சர்க்கரை ஆலைகள் மீண்டும் வளர்ச்சியை நோக்கி சென்று கொண் டிருக்கிறது.

புதுடில்லியில் உள்ள தேசிய அளவிலான கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கூட்டமைப்பு ஒவ்வொரு ஆண்டும் தேசிய அளவில் பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக செயல்படும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைக் கண்டறிந்து விருது வழங்கி வருகிறது. அதன் தொடர்ச்சியாக 2022-23ஆம் பருவத்தில் தேசிய அளவில் ஒட்டுமொத்த செயல்திறனுக்கான சிறந்த கூட்டுறவு சர்க்கரை ஆலையாக தர்மபுரி மாவட்டம், கோபாலபுரத்தில் செயல்படும் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை தேர்வு செய்யப்பட்டு முதல் பரிசைப் பெற்றுள்ளது. மேலும், தேசிய அளவில் சிறந்த நிதி மேலாண்மைக்குரிய முதல் பரிசை கள்ளக்குறிச்சி மாவட்டம், கச்சிராபாளையத்தில் செயல்படும் கள்ளக்குறிச்சி 2 கூட்டுறவு சர்க்கரை ஆலை பெற்று மாநிலத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது. அரசு எடுத்து வரும் தொடர் நடவடிக்கைகளின் காரணமாக சர்க்கரை ஆலைகள் தேசிய அளவில் சிறப்பிடம் பெற்று வளர்ச்சி பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சர்க்கரைத்துறை இயக்குநர் த. அன்பழகன், சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை கலைஞர் அரசு பெண்கள் கலைக்கல்லூரியில் சுற்றுச்சூழல் துறை மற்றும் காலநிலை மாற்றம் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆய்வு மேற்கொண்டு கல்லூரியில் நடைபெற்று வரும் மராமத்து பணிகளையும் வர்ணம் பூசும் பணியையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் க.நைனா முகமது, கே.சி.சிவக்குமார், வி.ஏ.டி.சி ராஜேந்திரன், மணிமொழியன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### வயநாட்டில் ஆற்றைக் கடந்து சிகிச்சை அளித்த கூடலூர்

# செவிலியர் சபீனாவுக்கு கல்பனா சாவ்லா விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை,ஆக.16-**

**வயநாட்டில் ஆற்றைக் கடந்து சிகிச்சை அளித்த கூடலூரைச் சேர்ந்த செவிலியர் சபீனாவுக்கு இவ்வாண்டுக்கான கல்பனா சாவ்லா விருது வழங்கப்படுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

வயநாடு நிலச்சரிவில் சிக்கியவர்களுக்கு தமிழகத்தின் கூடலூரைச் சேர்ந்த செவிலியர் சபீனா ஜிப்லைன் மூலம் ஆற்றைக் கடந்து சென்று சிகிச்சை அளித்தது குறித்த குறும்படம் ஒளிபரப்பப்பட்டது.



செவிலியர் சபீனாவின் இந்த வீர செயலுக்காக அவருக்கு தொடர்ந்து பாராட்டுகள் குவிந்து வருகிறது. இந்நிலையில், தமிழக செவிலியர் சபீனாவுக்கு, வீர தீர செயலுக்கான கல்பனா சாவ்லா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

செவிலியர் சபீனாவுக்கு, விருதினை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் வழங்க உள்ளார்.

வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, தனது உயிரையும் பொருட்படுத்தாமல், துணிச்சலாக செயல்பட்டு சிகிச்சை அளித்தமைக்காக சபீனாவுக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

### நெடுஞ்சாலைத்துறை சார்பில்

# 180 பேருக்கு உதவியாளர் பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக. 16-

நெடுஞ்சாலைத் துறை சார்பில் 180 நபர்களுக்கு உதவியாளர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.08.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தொகுதி IIA பணிக்கான நெடுஞ்சாலைத் துறையின் உதவியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 180 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு சாலை உட்கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு அரசு தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை உருவாக்கிடும் வகையில், நெடுஞ்சாலை துறை வாயிலாக மாநிலம் முழுவதும் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், மேம்பாடு செய்தல், புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகளை அமைத்தல் ஆகிய பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நெடுஞ்சாலைத் துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெற காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகின்றன. இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை நெடுஞ்சாலைத் துறை சார்பில் 414 இளநிலை வரை தொழில் அலுவலர்கள், 33 உதவிப் பொறியாளர்கள், 66 இளநிலை உதவியாளர்கள், 48 தட்டச்சர்கள், 6 சுருக்கெழுத்து தட்டச்சர் நிலைIII, 4 தணிக்கை உதவியாளர்கள் ஆகியோர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக நேரடி நியமனத்திலும், 45 இளநிலை உதவியாளர்கள், 3 உதவி வரைவாளர்கள், 9 தட்டச்சர்கள், 27 பதிவுரு எழுத்தர்கள் மற்றும் 24 அலுவலக உதவியாளர்கள் ஆகியோர் கருணை அடிப்படையிலும் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்.


அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக நெடுஞ்சாலைத் துறையின் உதவியாளர் பணியிடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 180 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் நேற்று 10 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மரு. ஆர். செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் இரா.செல்வதுரை, சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) ஆர்.சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### குடவாசல் வடக்கு ஒன்றியச் செயலாளர்

# ஜோதிராமனின் தந்தை சுப்பராயன் மறைவு!

## பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. - கழகத்தினர் அஞ்சலி!



*திருவாரூர், ஆக. 16 -*

*திருவாரூர் மாவட்டம் நன்னிலம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட குடவாசல் வடக்கு ஒன்றிய தி.மு.கழக செயலாளர் எஸ். ஜோதிராமனின் தந்தை சுப்பராயன் அவர்கள் வயது முதிர்வால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*மறைந்த சுப்புராயன் அவர்களுக்கு ஜோதிராமன், மணிகண்டன் ஆகிய மகன்கள் உள்ளனர். இதில் ஜோதிராமன் கழகத்தின் மூத்த ஒன்றிய செயலாளரும், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவரும் ஆவார். மறைந்த சுப்புராயன் அவர்கள் வடமட்டம் உயர்நிலைப் பள்ளி தாளாளராக இருந்து, ஏழை எளிய மக்களின் குழந்தைகளுக்கு கல்வி தந்து “கல்வி வள்ளல்” என்று பகுதிமக்களால் அன்போடு அழைக்கப்பட்டவராவார்.*

*அன்னாரின் மறைவு தகவல் அறிந்த மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. கழக நிர்வாகிகளு டன் நேரில் சென்று சுப்புராயன் அவர்களின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.*

*அன்னாரின் இறுதி ஊர் வலம் 15.08.2024. வியாழன் மாலை குடவாசல் அருகே உள்ள வடமட்டத்தில் நடைபெற்றது.*



திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் ஆத்தூர்குப்பம், கத்தாரி, தோப்பலகுண்டா, சொர்க்காயல்நத்தம், நாயனசெருவு, கொத்தூர், கொண்டகிந்தனப்பள்ளி, பச்சூர், கே.பந்தாரப்பள்ளி ஆகிய ஊராட்சிகளில் மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் திருவண்ணாமலை நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சி.என்.அண்ணாதுரை வாக்களித்து வெற்றி பெற செய்த வாக்காளர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றிய செயலாளர் என்.கே.ஆர்.சூரியகுமார், ஆ.சம்பத்குமார், டி.சாமுடி, கே.சாம்மண்ணன், வெண்மதி முனிசாமி, வீ.வடிவேல், எம்.சிங்காரவேலன், டி.தேவராஜி மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைக்கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், பெண்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.



மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஒன்றியம், திருக்கடையூர் ஊராட்சி மாரியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் ஸ்டாலின் இளம்பருதி வீடு தீ விபத்து ஏற்பட்டதை அறிந்து மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் பாதிக்கப்பட்ட குடும்பத்தை சந்தித்து ஆறுதல் தெரிவித்து நிவாரணம் வழங்கினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.செல்வமணி, பொதுக்குழு உறுப்பினர் ஜெ.கபிலன், ஒன்றிய குழு துணை தலைவர் பாஸ்கர், ஒன்றிய குழு உறுப்பினர் சாந்தி வேல்முருகன், ஊராட்சி மன்ற தலைவர் ஜெயமாலதி சிவராஜ், மாவட்ட தி.மு.க. விவசாய அணி துணை அமைப்பாளர் இரா. செந்தில் மற்றும் பலர் உள்ளனர்.